109

109

83

109

கணேச குளிகை.

சேரும் சரக்குகள் :-

இரசம் 1 கிராம்.

நாபி 6 கிராம்.

இலிங்கம் 2 கிராம்.

கந்தகம் 3 கிராம்.

செய்முறை :-

மேற்படி சரக்குகளை சுத்தி செய்து கல்வத்திலிட்டு பொன்னூமத்தைச் சாறுவிட்டு 3 மணி நேரம் அரைத்து உளுந்தளவு மாத்திரை செய்து நிழலில் உலர்த்திக் கொள்ளவும்.

அளவு :- வேளைக்கு 1 மாத்திரை.

துணை மருந்து :	தீரும் நோய்.
திப்பிலிச் சூரணத்தேன் கலவை	சுரங்கள்.

பத்தியம் :-

பாற்கஞ்சி, பாற் சோறு,

குறிப்பு : மருந்தைப் பழகியபின் பயன்படுத்த வேண்டும், பொன்னூமத்தைச்சாறு சேருவதினால் நாய்க்கடிக்கு வழங்கலாம்.

- .:.0.:.0.:.0.:.0.:.0.:. -

109

மாத்திரை வருக்கம்.

அமிர்தக்குளிகை (அமிர்தாதிக்குளிகை)

*****

சேரும் சரக்குகள் :-

அதிமதுரம்	10 கிராம்.
கோஷ்டம்	"
ஏலம்	"
கோரோசனை	"
சாத்திரபேதி	"
சண்பகப்பூ	"
மாசிக்காய்	"
இலவங்கம்	"

செய்முறை :-

மேற்கூறிய எட்டு சரக்குகளையும் சுத்தி செய்து, தூளாக்கி கல்வத்திலிட்டு அரைப்பிற்கு வெட்டிவேர்ச்சாறு, மாசிபத்திரிவேர்ச்சாறு, கருந்துளசிச்சாறு, விலாமிச்சைச்சாறு, இந்நான்கையும் கொண்டு முறையே ஒவ்வொன்றிலும், 6 மணி நேரம் ஊட்டி குன்றிபோல் மாத்திரை உருட்டி நிழலில் உலர்த்திக் கொள்ளவும்.

அளவு :- 1 மாத்திரை.

துணை மருந்து.		தீரும் நோய்.
மாசிப்பத்திரி கியாழம்	...	மாந்தம்.
இலவங்கக் கியாழம்	...	மாந்தசுரம், வாந்தி.
மூலைப்பால்	...	குடற்புழுவன்.
		நீர்ப்பாடு.
		கரப்பான்.
		நாவரட்சி.
		வயிற்றுஎரிவு.
		விடாச்சுரம்.
		உப்புசம்.
		இருமல்.

-----.*.*.*.*.* * *---------

நீர்ப்பெருக்கிற்கு.

"ஓரரைக்கால் குளவிந்தம் ஒன்பதரைக்கால் மரமஞ்சள்
ஈரரைக்கால் கருவேலம்பிசின் இருபதரைக்கால் ஆவாரம் விரை
தேறு அரைக்கால் கடு அரைக்கால் தேனில் குழைத்துத் தின்பீரேல்
நீரரைக்கால் நீரொருக்கால் வாராது நெடுமாலிணை நிச்சயமே."

சேரும் சரக்குகள் :--

கஸ்தூரி மஞ்சள் (குளவிந்தம்)		1 கிராம்.
மரமஞ்சள்	...	9 கிராம்.
கருவேலம்பிசின்	...	2 கிராம்.
ஆவாரைவித்து	...	20 கிராம்.
தேற்றான்வித்து (தேறு)	...	1 கிராம்.
கடுக்காய் (கடு)	...	1 கிராம்.

இவைகளை நுண் பொடி ஆக்கிக் கொள்ளவும்.

அளவு :- 4 கிராம்.

துணை மருந்து.		தீரும் நோய்.
தேன்	...	நீர்ப்பெருக்கு நீங்கும். (தனிப்பாடல்)

****

அஷ்டபைரவக் குளிகை.

சேரும் சரக்குகள்:--

வாளம்	...	15 கிராம்.
இரச கற்பூரம்.	...	3 "
இலிங்கம்	...	3 "
கந்தகம்	...	3 "
வீரம்	...	3 "
நாபி	...	3 "
இரதம்	...	3 "
சுக்கு	...	3 "
மிளகு	...	3 "
திப்பிலி	...	3 "
சாதிக்காய்	...	3 "
சாதிப்பத்திரி	...	3 "
இலவங்கம்	...	3 "

செய்முறை.

மேற்படி சரக்குகளைச் சுத்தி செய்து நுண் பொடியாக்கி கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாறு, தாய்ப்பால் இவற்றால் ஆறு மணி நேரமும், பொடுதலைச் சாறு, மஞ்சள் கரிசலாங்கண்ணிச் சாறு, நாவல் பட்டைச்சாறு இவைகளால் மூன்று மணி நேரம் அரைத்து, மிளகு உருவத்தில் மாத்திரை உருட்டி உலர்த்திக் கொள்ளவும்.

அளவு:- 1 - 2 மாத்திரை.

துணை மருந்து.		தீரும் நோய்.
தாய்ப்பால்	...	சுரம் அறுபத்து நான்கு.
தேன்	...	தோடம்.
இலவங்கக்கியாழம்	...	விட தோடம்.

குறிப்பு:-

சுர ஆரம்ப காலத்தில் மலக்கட்டிருந்தால் அதனை நீக்கிக் காலை மாத்திரம் ஒரு வேளை கொடுப்பது வழக்கம். வாளம் சேர்ந்த மருந்தாகையால் நாட்பட்ட சுரங்களிலும் சுரத்தில் பேதி கண்டிருப்பினும் வழங்குவது வழக்கில் இல்லை.

--.ஓ.ஓ.ஓ.ஓ.ஓ.---

ஆனந்த வயிரவம்.

சேரும் சரக்குகள் :-

வெள்வங்கபற்பம்
கருவங்கபற்பம்
இலிங்கம்
வெங்காரம்
கந்தகம்
இரசம்
தாம்பிரபற்பம்
தாளகம்
அயச் செந்தூரம்

செய்முறை :-

மேற்கூறிய பொருள்களை சம எடையாகச் சேர்த்துத் திரிபலைக் கியாழத்தால் நன்றாக அரைத்து உருட்டி 15 தினம் வெய்யிலில் காயவைத்து ஒருநாள் திரிபலைக்குடிநீரில் தோலாந்திரத்தோயும்படி எரித்து கல்வத்திலிட்டு பணி (நல்லபாம்பு) பிச்சினால் அரைத்து குன்றியளவாக குளிகை செய்து நிழலில் உலர்த்திக் கொள்ளவும்.

அளவு :- 1 மாத்திரை.

துணை மருந்து.	தீரும் நோய்.
...	சீதாங்க சன்னி.

இரச பூபதி.

சேரும் சரக்குகள் :-

இரசம்

கந்தகம்

கருநாபி

உருக்கு

தாம்பிரப்பொடி

செய்முறை :-

மேற்படி சரக்குகளைச் சுத்தி செய்து சம அளவாக எடுத்து செருப்படிச்சாற்றில் மூன்று நாள் அரைத்து வெய்யிலில் உலர்த்திப் பொடித்துச் சீலைமண் செய்த காசிக்குப்பியிலிட்டு வாலு காயந்திரத்தேற்றி 36 மணி நேரம் மூன்று தீ கொண்டும் எரித்து ஆறவிட்டு எடுத்துக் கொள்ளவும். தி பிறகு இஞ்சிச்சாற்றில் 3 மணி நேரம் அரைத்து உளுந்து அல்லது மிளகளவாக உருட்டி உலர்த்திக் கொள்ளவும்.

அளவு :- வேளைக்கு 1 மாத்திரை வீதம் மூன்று நாள் கொள்ளவும்.

துணை மருந்து.

தீரும் நோய்.

சன்னி, குளிர்சுரம், சூலை, கடுப்பு, உப்புசம் விடங்கள், கடிவகைகள் நீங்கும்.

பத்தியம் :-

எள், கடுகு, புளி, மாம்சம், கைப்புச்சுவையுள்ள பொருள்களைத் தள்ளவும்.

உப்பும் வற்றலும் ஆகும்.

-0-0-0-0-0-0-

இ ரா ம பா ண ம்.

சேரும் சரக்குகள் :-

இலிங்கம்	...	10 கிராம்.
எலிப்பாடாணம்	...	15 கிராம்.

செய்முறை :-

மேற்படி பொருளைச் சுத்திசெய்து கல்வத்திலிட்டுத் மருளூமத்தைச்சாறு விட்டு 3 நாள் அரைத்து சிறு பயறளவு மாத்திரைகளாக உருட்டிக் கொள்ளவும்.

அளவு :- 1 மாத்திரை.

துணை மருந்து.		தீரும் நோய்.
தாய்ப்பால், சர்க்கரை.	...	வெதுப்புச் சுரம்.

பத்தியம் :- பாற் கஞ்சி.

குறிப்பு :-

மாத்திரை பழகிய பின் உபயோகிக்க வேண்டும்.

இ ரா ச ராச மா த் தி ரை.

(ராஜ ராஜேஸ்வரக் குளிகை)

சேரும் சரக்குகள்:-

இரசம்

துத்தம்

இலிங்கம்

கந்தகம்

நாபி

மனேசிலை

செய்முறை:-

மேற்படி பொருள்களைச் சமனுக நிறுத்தெடுத்து வேப்பீர்க்குக்குடி நீரினல் அரைத்துத் திரட்டிக் குகையிலிட்டுச் சீலை மண் செய்து ஒரு கோழிப்புடமிட்டாற விட்டு எடுத்து வெள்ளாட்டுப்பிச்சிலும் கடாப்பிச்சிலும் தனித்தனியாக இரண்டு இரண்டு நாள் அரைத்து குன்றி அளவு மாத்திரை செய்யவும்.

அளவு:- வேளைக்கு 1 மாத்திரை.

துணை மருந்து.	தீரும் நோய்.
திரிகடுகுடி நீரில் கரைத்துக் கொடுக்க ...	சந்நிபதின் மூன்றும் தீரும்.

ஃஃஃஃஃஃஃஃஃ

இலிங்கபூபதி.

சேரும் சரக்குகள்:-

இலவங்கம்

ஓமம்

காவி

இரச செந்தூரம்

இரச கற்பூரம்

இலிங்கம்

செய்முறை:-

மேற்படி பொருள்களைச் சம எடையாக எடுத்து தண்ணீர் விட்டு நன்ருக அரைத்து பயறுபோல் உருட்டி உலர்த்திக் கொள்ளவும்.

அளவு:- வேளைக்கு 1 மாத்திரை.

துணை மருந்து.		தீரும் நோய்.
தக்க துணை மருந்து	...	பிணிகள் பல.

****

எமதண்டக் குளிகை.

சேரும் சரக்குகள் :-

நாபி
இரசம்
மனோசிலை
கந்தகம்
கோரோசனை
வீரம்
பூரம்
காவிக்கல்
இலிங்கம்
வெள்ளைப்பாடாணம்
துருசு
அரிதாரம்
ஏலம்
கிராம்பு
திப்பிலி
சுக்கு
அக்கராகாரம்
கற்பூரம்
இரச செந்தூரம்
கோஷ்டம்
கடக ரோகிணி
~~பால்தூரம்~~ பால்துத்தம்
சோம்பு
கௌரி பாஷாணம்
வெள்ளி பற்பம்
வெங்காரம்

செய்முறை :-

மேற்படி சரக்குகளைச் சுத்தி செய்து சம எடை எடுத்துக் கழிக் கல்லில் இட்டுக கரிசாலைச் சாற்றால் 12 மணி நேரம் அரைத்து பயறளவு மாத்திரை உருட்டிக் கொள்ளவும்.

அளவு :- வேளைக்கு 1 மாத்திரை.

துணை மருந்து.		தீரும் நோய்.
தேன்	...	வாதம் என்பது சுரங்கள் தோடம் விக்கல் பக்கவாதம் குன்மம் கோழையுடன் கூடிய இருமல் சன்னி பதின்மூன்று

குறிப்பு :-

கபவாத சுரத்தில் இக்குளிகை சிறப்பாக வழங்கப்படுகிறது.

கண் காச மாத்திரை.

சேரும் சரக்குகள் :-

ஊது சங்கு

சுக்கு

மிளகு

திப்பிலி

அரிதாரம்

அதிமதுரம்

புங்கம்பருப்பு

பீதரோகணி

பால் துத்தம்

மனோசிலை

செய்முறை :-

மேற்படி சரக்குகளைச் சுத்தி செய்து கல்வத்திலிட்டுப் பொடித்து நந்தியாவட்டப்பூச்சாற்றால் அரைத்துக் கயிறு (கண் மாத்திரை) செய்து உலர்த்திக் கொள்ளவும்.

துணை மருந்து.	தீரும் நோய்.
தேனில் உரைத்துக் கண்ணில் எள்ளளவு தீட்ட ...	கண் காசம், கண் படலம் தீரும்.

.0.0.0.0.0.

109